மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2023ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12ம் நாள் புதன்கிழமை

இ.ம.எண்.05/2023
உள்
அசல் வழக்கு எண்.26/2019
-------------

ரா.அழகர்சாமி ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. ரா.சீத்தாலெட்சுமி
2. ரா.சீனிவாசன்
3. கி.கிருஉஷ்ணவேணி
4. ரா.ஜெயலெட்சுமி
5. ரா.கருப்பசாமி
6. எஸ்.என்.பாஸ்கரன் (இறப்பு)
7. எஸ்.என்.ரமேஷ்பாபு
8. சார்பதிவாளர்
   சார்பதிவாளர் அலுவலகம் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
9. பா.ரமாதேவி
10. பா.சினேகா
11. பா.அபிஷேக் ... எதிர்மனுதாரர்கள்/உத்தேச பிரதிவாதிகள்

இந்த மனு 10.03.2023ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 24.03.2023ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.பாஸ்கரன் அவர்கள் ஆஜராகியும், 8ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 5ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.கே.பாண்டீஸ்வரி அவர்கள் ஆஜராகி எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், 6, 9 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/உத்தேச பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜே.சுரேஷ் தேவ ஜஸ்டின் அவர்கள் ஆஜராகி எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், 1 முதல் 3, 7 எதிர்மனுதாரர்கள்/

பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதார்கள் தரப்பு எதிர்உரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை *6* விதி *17, 18* மற்றும் பிரிவு *151* சிபிசி-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், மனுவில் கண்டுள்ள விபரப்படி பிராதை சீர்திருத்தம் செய்துகொள்ள உத்தரவிடக்கோரி *01.03.2023*ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2). மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-</u>**

தாவா வழக்கானது மனுதாரர் தரப்பு விசாரைணக்காக நிலுவையில் இரந்தபோது *6*ம் பிரதிவாதியான எஸ்.என்.பாஸ்கரன் கடந்த *31.05.2021*ம் தேதியன்று *9* முதல் *11* உத்தேச பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். தாவா வழக்கானது வாரிசுகளை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக தாவா வழக்கில் இறந்துபோன *6*ம் பிரதிவாதியான எஸ்.என்.பாஸ்கரன் அவர்களின் வாரிசுகளை சேர்க்க வேண்டியது அவசியமாக இருந்த காரணத்தினால் மேற்படி நபர்களை கட்சிக்காரர்களாக சேர்க்க மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவானது இ.ம.எண்.*03/2023* என நம்பராகி நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த மனுவின் அடிப்படையில் மேற்படி நபர்களை தாவா வழக்கில் *9, 10, 11* பிரதிவாதிகளாக சேர்த்து பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. இல்லாதுபோனால் மனுதாரருக்கு ஏராளமான கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படுவதாய் உள்ளது என்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**<u>3). 8ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:-</u>**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியுள்ள சங்கதிகள்

ஒருசிலவற்றை தவிர ஏனைய சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பான பொய்யான சங்கதிகளாகம். மனுதாரர்கள் கூறியுள்ள சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். அசல் வழக்கில் கண்ட 6ம் பிரதிவாதி கடந்த 31.05.2021ம் தேதியில் இறந்துவிட்டார் என்றும், அவருக்கு 9 முதல் 11 வரையிலான நபர்கள் வாரிசுகள் என்று கூறி அவர்களை வழக்கில் கட்சியாக சேர்க்கக்கோரி 01.03.2023ம் தேதியில் மனு செய்துள்ளது ஏற்றுக் கொள்ளக்கூடியதில்லை. மனுதாரர் மனுவில் 8ம் எதிர்மனுதாரரை கட்சியாக சேர்த்துள்ளதால் அரசையும் கட்சியாக சேர்த்து மனு தாக்கல் செய்ய வேண்டும். ஆனால் அரசை கட்சியாக சேர்க்காம் மனு தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர் மனுவானது தள்ளுபடி செய்ய வேண்டியதாகும். மனுதாரர் அசல் வழ்ககினை காலதாமதம் செய்வதற்காக வேண்டியே தாவா மனுவில் அரசை கட்சியாக சேர்க்காமல் மனு செய்துள்ளார். அதனால் மனு தள்ளுபடி எதிர்மனுதாரர் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியதாகும் என்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

5). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

6). மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் இல்லை.

7). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

## 8). தீர்வு:-

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. இந்த வழக்கானது வாதிகள் தரப்பில் பாகப்பிரிவினை மற்றும் விளம்புகை பரிகாரங்களுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரால் மனுவில்

கண்டுள்ள விபரப்படி பிராதை சீர்திருத்தம் செய்துகொள்ள உத்தரவிடக்கோரி 01.03.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும் நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். வழக்கில் உள்ள தரப்பினர்களின் இறப்பை பதிவு செய்து அவர்களுடைய வாரிசுகளை வைத்து வழக்கை மேல்நடத்த வேண்டியது அவசியமான ஒன்றாகும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர்கள் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, மனுவில் கண்டுள்ள விபரப்படி பிராதை சீர்திருத்தம் செய்துகொள்ள உத்தரவிடக்கோரி 01.03.2023ம் தேதி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.